Kalanjiyam International Journal of Tamil Studies

களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

https://ngmtamil.in/

*Article Type: Research Article*

# Domesticated Animals in Pattinappalai: Socio-Economic and Ecological Perspectives

**Mr.V. Mgramachandiran[1*], Dr. S.Vaitheeswaran[2],**

[1]Ph.D. Research Scholar (Full Time), (Reg.No :204PHD23F268TAM), PG & Research Department of Tamil, Kalaignar Karunanidhi Government Arts College, Tiruvannamalai - 606 603. Affiliated to Thiruvalluvar University, Serkkadu, Vellore – 632115.
[2]Research Guide & Supervisor, Associate Professor, PG & Research Department of Tamil, Kalaignar Karunanidhi Government Arts College, Tiruvannamalai - 606 603
[*]Correspondence: perinbanmgr@gmail.com, Tel: +919047684039

**Received**: 22-01-2026; **Revised**: 24-01-2026; **Accepted**: 27-01-2026; **Published**: 01-02-2026

**Abstract:** Sangam literature serves as a temporal mirror, accurately capturing the lifestyle of ancient Tamils. Among them, Pattinappalai—one of the Pathuppattu (Ten Idyls) anthologies—extensively explains the commercial excellence of the Chola port city, Kaveripoompattinam, and the socio-economic conditions of its inhabitants. This article examines the domesticated animals mentioned in Pattinappalai, their utility, and the bond between humans and these creatures through ecological and historical lenses. Specifically, it provides a detailed analysis of the water resources of the Kaveri River, the fertility of the Marutham (agricultural) landscape, and reports regarding animals reared in those lands, such as buffaloes, cows, dogs, chickens, and goats. Furthermore, by comparing these findings with recent archaeological results from Keezhadi, this paper logically presents the livestock rearing practices of Sangam-era Tamils and the methods by which horses were imported for commercial purposes. This study reveals how animals were not merely treated as necessities in Tamil society but were revered based on ethics (Aram), highlighting ancient thoughts on their conservation.

**Keywords:** Land and Water, Kaveripoompattinam, Domesticated Animals, Cattle, Dog, Goat, Sangam Literature, Pattinappalai, Ecology,

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# பட்டினப்பாலையில் வளர்ப்பு உயிரினங்கள்: சமூகப் பொருளாதார மற்றும் சூழலியல் நோக்கு

[1]**வெ.எம்ஜிராமச்சந்திரன்**, முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், கலைஞர் கருணாநிதி அரசு கலைக்கல்லூரி, (திருவள்ளுவர் பல்கலைக்கழக இணைவு பெற்றது), திருவண்ணாமலை.

[2]**முனைவர் ச. வைத்தீஸ்வரன்**, நெறியாளர், இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரி, திருவண்ணாமலை.

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கியங்கள் பண்டையத் தமிழர்களின் வாழ்வியலைத் துல்லியமாகப் படம்பிடித்துக் காட்டும் காலக்கண்ணாடிகளாகத் திகழ்கின்றன. அவற்றுள் பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றான பட்டினப்பாலை, சோழ நாட்டின் துறைமுக நகரமான காவிரிப்பூம்பட்டினத்தின் வணிகச் சிறப்பையும், அங்கு வாழ்ந்த மக்களின் சமூகப் பொருளாதார நிலைகளையும் விரிவாக விளக்குகின்றது.இக்கட்டுரை, பட்டினப்பாலையில் குறிப்பிடப்பட்டுள்ள வளர்ப்பு உயிரினங்கள், அவற்றின் பயன்பாடு மற்றும் மனிதர்களுக்கும் அவ்வுயிரினங்களுக்கும் இடையிலான பிணைப்பைச் சூழலியல் மற்றும் வரலாற்று நோக்கில் ஆராய்கிறது. குறிப்பாக, காவிரி ஆற்றின் நீர் வளம், மருத நிலத்தின் செழுமை மற்றும் அந்நிலங்களில் வளர்க்கப்பட்ட எருமை, பசு, நாய், கோழி, ஆடு போன்ற உயிரினங்களைப் பற்றிய செய்திகள் இங்கு விரிவாகப் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.மேலும், அண்மைக் கால கீழடி அகழாய்வு முடிவுகளுடன் ஒப்பிட்டு, சங்க காலத் தமிழர்களின் கால்நடை வளர்ப்பு முறைமைகளும், வணிக ரீதியாகக் குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்ட விதமும் இக்கட்டுரையில் தர்க்கரீதியாக முன்வைக்கப்படுகின்றன.தமிழ்ச் சமூகத்தில் உயிரினங்கள் வெறும் தேவைகளுக்காக மட்டுமன்றி, அறம் சார்ந்து எவ்வாறு போற்றப்பட்டன என்பதையும், அவற்றின் பாதுகாப்பு குறித்த பண்டையச் சிந்தனைகளையும் இந்த ஆய்வு வெளிப்படுத்துகிறது.

**குறிப்புச்சொற்கள்**

நிலமும் நீரும், காவிரிப்பூம்பட்டினம், வளர்ப்பு உயிரினங்கள், மாடு, நாய், ஆடு, சங்க இலக்கியம், பட்டினப்பாலை, சூழலியல்.

## 1. முன்னுரை

சங்க இலக்கியம் என்பது பண்டையத் தமிழர்களுடைய வரலாற்றுச் சுரங்கமாகத் திகழ்கின்றது.இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டத் தமிழர்களின் அகம் மற்றும் புற வாழ்க்கையைத் தெளிவுபடுத்தும் முதன்மை ஆதாரங்களாக இவை அமைகின்றன. சங்க இலக்கியத்தில் பல்வேறு உயிரினங்கள் பற்றிய குறிப்புகள் காணக் கிடைக்கின்றன, இது அக்கால மக்களின் உயிரியல் அறிவையும் இயற்கையுடனான நெருக்கத்தையும் காட்டுகிறது.மனித இனம் தோன்றிய காலத்திலிருந்தே விலங்குகளுடனானத் தொடர்பு பிரிக்க முடியாத ஒன்றாக இருந்து வந்துள்ளது. மக்களின் தேவைக்காகவும், பாதுகாப்பிற்காகவும், போக்குவரத்திற்காகவும் என பல்வேறு காரண காரியங்களுக்காகப் பல உயிரினங்களை வளர்க்கக்கூடியத் தேவை அக்காலத்தில் வலுவாக இருந்தது.

இன்றைய நவீனக் காலகட்டத்தில் வணிக நோக்கத்திற்காகப் பல்வேறு உயிரினங்களைச் செயற்கையாக வளர்க்கக்கூடிய நிலை உருவாகிவிட்டது. ஆனால், சங்க காலத்தில் உயிரினங்கள் இயற்கையோடு இயைந்த முறையில், குடும்பத்தின் ஒரு பகுதியாகவேக் கருதப்பட்டன.சங்க இலக்கியங்களில் குறிப்பாகப் பட்டினப்பாலையில் மக்களின் தேவைக்காக வளர்க்கப்பட்ட உயிரினங்களைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.கடியலூர் உருத்திரங்கண்ணனார் இயற்றிய இப்பாடல், காவிரிப்பூம்பட்டினத்தின் செழுமையை விவரிக்கும் அதே வேளையில், அங்கு நிலவிய உயிரினப் பன்முகத்தன்மையையும், மனித-விலங்கு உறவின் ஆழத்தையும் பதிவு செய்துள்ளது.

## 2. நிலமும் நீரும்: உயிரினத் தோற்றத்தின் அடிப்படை

உயிரினங்கள் வாழ்வதற்கும் வளர்வதற்குமான முக்கிய மூலப்பொருட்கள் நிலமும் நீரும் ஆகும். இவையின்றி எந்த உயிரினமும் மண்ணில் வாழ முடியாது.நீரின்றி நிலமும், நிலமின்றி நீரும் பிரித்தறிய முடியாது. இரண்டுமே உயிரின வளர்ப்பில் முக்கிய இடம் வகிப்பவை.தாவரங்கள் ஒளிச்சேர்க்கை செய்வதற்கும் மண்ணில் வேரூன்றி நிலைத்து நிற்பதற்கும் இவை அவசியமாகின்றது.சங்க இலக்கியத்தில் ஐவகை நிலங்கள் பற்றிய குறிப்புகள் மிகுதியாக இடம் பெற்றுள்ளது. அவற்றோடு ஐவகை நிலத்திலும் வாழக்கூடிய பறவைகள், விலங்குகள், தாவரங்கள் உள்ளிட்ட பல்வேறு உயிரினங்களைப் பற்றிய தகவல்களும் மிகுதியாக உள்ளன.

### 2.1 நீரின் இன்றியமையாமை

மண் வளமை பெறுவதற்கு நீர் அவசியம். தண்ணீரை வரப்பு கொண்டு முறையாகப் பராமரித்தல் என்பது ஒரு வேளாண்மைச் சார் நுட்பமாக மட்டுமன்றி, உயிர்ச் சூழலைப் பாதுகாக்கும் அறமாகவும் கருதப்பட்டது.இதனை வள்ளுவர் கீழ்வரும் குறட்பாவில் விளக்குகிறார்.

**நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி**
**தான்நல்கா தாகி விடின். (குறள்- 17)**

மேற்கண்ட குறட்பாவில் நீரின் அவசியத்தை வள்ளுவர் மேகம் கடலிலிருந்து நீரை முகர்ந்து சென்று மீண்டும் அதனிடத்திலே பொய்யாது ஒழியுமானால், பெரிய கடலும் தன் வளம் குன்றிப் போகும் எனக் குறிப்பிடுகிறார்.இது ஒரு மூன்றாம் நிலை ஆய்வாகப் பார்க்கப்படும்போது, உலகளாவிய நீர்ச் சுழற்சியின் முக்கியத்துவத்தைப் பண்டையத் தமிழர்கள் உணர்ந்திருந்தனர் என்பதை உறுதிப்படுத்துகிறது.

### 2.2 பட்டினப்பாலையில் நீர்ச் சுழற்சி மற்றும் வணிகம்

பட்டினப்பாலையில் நீர் சுழற்சியானது வெறும் இயற்கை நிகழ்வாக மட்டுமன்றி, ஒரு நாட்டின் பொருளாதாரப் பரிமாற்றத்தோடு ஒப்பிட்டுப் பேசப்படுகிறது. இது அக்காலக் கவிஞர்களின் மேன்மையானச் சிந்தனை போக்கைக் காட்டுகிறது.

**வான் முகந்த நீர் மலைப் பொழியவும்**
**மலைப் பொழிந்த நீர் கடல்பரப்பவும்**
**மாரி பெய்யும் பருவம் போல**
**நீரினின்றும் நிலத்து ஏற்றவும்**
**நிலத்தினின்று நீர்ப் பரப்பவும் ( பட்டினப்பாலை 126- 130)**

மேகம் கடலிலே முகந்த நீரை மலையிலே மழையாகப் பொழிவதும், மலையில் பொழிந்த நீர் ஆறாகப் பெருகிக் கடலிலே போய்ச் சேருவதுமாகிய மழை பொழியும் காலத்தைப் போல, பல நாடுகளிலிருந்து நீர்

வழியாகக் கப்பலில் வந்த பொருட்களைக் கடலிலிருந்து கடற்கரையில் கொண்டு வந்து சேர்ப்பதும், உள்நாட்டுப் பொருட்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதும் போன்ற செய்திகள் இங்கு பயின்று வந்துள்ளன.

**2.3 நிலமும் நீரும் கலந்த வாழ்வியல்**

நிலத்திற்கும் நீருக்குமானத் தொடர்பைக் குறுந்தொகைப் பாடல் ஒன்றும் மிக அழகாகப் பதிவு செய்கிறது. இது மனித உறவுகளை இயற்கை மூலக்கூறுகளுடன் இணைத்துப் பார்க்கிறது.

**யாயும் ஞாயும் யாரா கியரோ**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்**
**யானும் நீயும் எவ்வழி அறிதும்**
**செம்புலப் பெயல்நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே. (குறுந்தொகை - 40)**

வானிலிருந்து வருகின்ற மழைநீர் நிலத்தோடு கலந்து ஒன்றாவது போல, தலைவன் தலைவியின் மனமும் ஒன்றாகிவிட்டது என்பதை இது உணர்த்துகிறது.ஆகையால் நீரின்றி நிலமும் நிலமின்றி நீரும் பிரித்தல் அரிது என்பது திண்ணமாகிறது. உயிரின வளர்ப்பிற்கு அடிப்படையாகத் திகழும் இந்த இயற்கை வளங்களே பட்டினப்பாலையில் விவரிக்கப்படும் செழுமைக்குக் காரணமாகின்றன.

**3. காவிரிப்பூம்பட்டினம்: ஒரு வரலாற்றுப் பின்னணி**

குடகு மலையில் தோன்றி வழி நெடுகிலும் வளமையைத் தந்து தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களையும் வளமைப்படுத்தும் ஆறு காவிரி ஆறு ஆகும்.அத்தகைய காவிரி புகும் பட்டினமே காவிரிப்பூம்பட்டினம் எனும் பூம்புகார். தமிழர்களின் நாகரிகத்தையும், கடல் பயணத்தையும், ஏற்றுமதி மற்றும் இறக்குமதியையும் எடுத்துச் சொல்லும் சங்க இலக்கிய நூல் பட்டினப்பாலை ஆகும்.

**3.1 காவிரியின் வற்றாத வளம்**

பட்டினப்பாலையின் தொடக்க வரிகளே காவிரியின் பெருமையைப் பேசுகின்றது.

**வான்பொய்ப்பினும் தான் பொய்யா**
**மலைத்தலைய கடல் காவிரி**
**புனல்பரந்து பொன்கொழிக்கும்( பட்டினப்பாலை 5 -7)**

வானில் இருந்து வரக்கூடிய மழை பொய்யாமல் போயினும், வறட்சியின்றி எக்காலத்தும் நீர் வளம் குன்றாமல் இருப்பது காவிரி.தான் செல்லும் பகுதி முழுவதும் வளமை சேர்ப்பதோடு செல்வத்தையும் பெருகச் செய்கிறது.காவிரிப்பூம்பட்டினம் மருவூர்ப்பாக்கம் (கடற்கரை ஒட்டிய பகுதி) மற்றும் பட்டினப்பாக்கம் (நகரப் பகுதி) என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

| **நிலப்பகுதி** | **சிறப்பம்சங்கள்** | **அங்கு வாழ்ந்த உயிரினங்கள்** |
|---|---|---|
| பட்டினப்பாக்கம் | செல்வந்தர்கள், அரசர்கள் வாழும் பகுதி | குதிரைகள், யானைகள் |
| மருவூர்ப்பாக்கம் | வெளிநாட்டு வணிகர்கள், மீனவர்கள் பகுதி | மீன்கள், நாய், ஆடு |
| புறச்சேரி | உழைக்கும் மக்கள், விவசாயிகள் பகுதி | பன்றி, கோழி, எருமை |

**4. வளர்ப்பு உயிரினங்களின் நிலவியல் வகைப்பாடு**

பூம்புகார் முழுவதும் காவிரி நீர் பாய்ந்து ஓடுவதால் என்றும் வளமை குன்றாமல் இருந்தது. மருத நிலங்கள் சமவெளிப் பகுதி என்பதால் அங்குப் பல்வேறு விதமான பயிர்களையும் வளர்த்தனர்.பட்டினப்பாலை

பாடல் வரிகள் மருத நிலத்தின் வளமையும் அங்கு வளர்க்கப்பட்டப் பல்வேறு உயிரினங்களையும் எடுத்து இயம்புகின்றன.

### 4.1 மருத நிலத்தின் வேளாண் சூழல்

கீழ்வரும் பாடல் வரிகள் மருத நிலத்தில் நிலவிய வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்பின் பிணைப்பை விளக்குகின்றன.

**விளைவு அறா வியன் கழனி**
**கார்க்கரும்பின் கமழ் ஆலைத்**
**தீத் தெறுவின் கவின் வாடி**
**நீர்ச் செறுவின் நீள் நெய்தற்**
**பூச்சாம்பும் புலத்து ஆங்கண்,**
**காய்ச் செந்நெல் கதிர் அருந்து**
**மோட்டு எருமை முழுக்குழவி**
**கூட்டு நிழல் துயில் வதியும்**
**கோள் தெங்கின் , குலை வாழைக்**
**காய்க் கமுகின் , கமழ் மஞ்சள்**
**இனமாவின் இணர்ப் பெண்ணை**
**முதற் சேம்பின் முளை இஞ்சி ( பட்டினப்பாலை 8-19)**

இப்பாடல் கரும்பு, நெல், தென்னை, வாழை, பாக்கு, மஞ்சள், மாமரம், பனை, சேப்பங்கிழங்கு, இஞ்சி போன்றவற்றைக் குறிப்பிடுகின்றது.அகன்ற வயல்களில் விளைச்சல் நீங்காது நடந்து கொண்டேயிருக்கும். அவ்வயல்களில் விளைந்த நன்கு முற்றிய கரும்பினைப் பாகாகக் காய்ச்சுகின்ற மணம் கமழும் ஆலைகளும் உண்டு.அவ்வாலைகளில் இருந்து வரும் நெருப்புப் புகையின் வெப்பத்தால் நீர் நிறைந்த வயல்களில் நீண்டு வளர்ந்திருக்கும் நெய்தல் பூக்கள், அழகு கெட்டு வாடிப் போகும்.

அவ்விடங்களிலே விளைந்த காய்ந்த செந்நெல்லின் கதிர்களைத் தின்ற பெரிய வயிற்றையுடைய எருமை மாட்டின் முதிர்ந்த கன்றுகள், நெற்கூடுகளின் நிழலிலே படுத்து உறங்கும்.இது எருமை மாடுகள் வயல்களில் தாராளமாக மேய விடப்பட்டதையும், அவை மனித வாழ்விடங்களுக்கு மிக நெருக்கமாக இருந்ததையும் காட்டுகிறது.

### 4.2 வளர்ப்பு உயிரினங்களின் பட்டியல்

பட்டினப்பாலையில் குறிப்பிடப்படும் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் தரவுகள் கீழேத் தொகுக்கப்பட்டுள்ளன.

| வகை | பெயர்கள் | குறிப்புகள் |
|---|---|---|
| தானியங்கள் | செந்நெல், கரும்பு | முதன்மைப் பயிர்கள் |
| மரங்கள் | தென்னை, பனை, மாமரம், வாழை, பாக்கு | பழம் மற்றும் நிழல் தரும் மரங்கள் |
| கிழங்குகள் | மஞ்சள், சேம்பு, இஞ்சி | வணிக முக்கியத்துவம் வாய்ந்தவை |
| கால்நடைகள் | எருமை, பசு, காளை | உழவு மற்றும் பால் தேவைகளுக்காக |
| பறவைகள் | கோழி, கௌதாரி | வீடுகளில் வளர்க்கப்பட்டவை |

### 5. கோழி வளர்ப்பு: சமூகப் பொருளாதாரக் குறியீடு

சங்க இலக்கியத்தில் கோழி என்னும் சொல் ஊர்ப் பெயராகவும், புலவர் பெயராகவும், சோழ மன்னர்களின் பெயராகவும் வந்துள்ளது.சங்க கால முதல் இக்காலம் வரை வீடுகளில் கோழிகளை வளர்க்கும் வழக்கம் நடைமுறையில் உள்ளது. பட்டினப்பாலையில் கோழி வளர்ப்பு பற்றிய செய்திகள் மிக நுணுக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

### 5.1 செல்வச் செழிப்பின் அடையாளமாகக் கோழிகள்

பட்டினப்பாலையில் ஒரு சுவையானக் காட்சி விவரிக்கப்படுகிறது. அங்கு வாழ்ந்த மக்களின் செல்வச் செழிப்பு எத்தகையது என்பதை இது உணர்த்துகிறது:

**கோழி எறிந்த கொடுங்கால் கனங்குழை**
**பொற்கால் புதல்வர் புரவி இன்று உருட்டும்**
**முக்காற் சிறுதேர் முன்வழி விலக்கும் ( பட்டினப்பாலை 23- 27 )**

வீட்டின் முற்றத்தில் காய வைக்கப்பட்டிருக்கும் தானியங்களைத் தின்ன வரும் கோழிகளை விரட்ட, அங்குள்ளப் பெண்கள் சாதாரணக் கற்களைப் பயன்படுத்தவில்லை. மாறாகத் தங்களின் காதில் அணிந்திருந்த கனமானப் பொன் குழையினை (காதணி) கழற்றி எறிவர்.அக்குழை, பொன்னாலான அணிகலன்களைக் கால்களிலே அணிந்துள்ள சிறுவர்கள், கையால் உருட்டி விளையாடும் நடைவண்டியின் (சிறுதேர்) சக்கரங்களில் மாட்டிக்கொண்டு, அதன் ஓட்டத்தைத் தடுத்து நிறுத்துமாம்.இது கோழி வளர்ப்பு மற்றும் மக்களின் அதீதச் செல்வ நிலையையும் ஒருசேரக் காட்டுகிறது.

### 5.2 பன்வகைக்கோழிகள்

பட்டினப்பாலையில் பல்வேறு வகையான கோழிகள் வளர்க்கப்பட்டதற்கானக் குறிப்புகளும் உள்ளன. இவை பெரும்பாலும் குடியிருப்புகளின் அருகில் இருந்தன.

**பறழ்ப் பன்றி பல் கோழி**
**உறைக் கிணற்றுப் புறச்சேரி**
**ஏழகத் தகரொடு சிவல்**
**விளையாட (பட்டினப்பாலை 75-77 )**

குட்டிகளோடு பன்றிகளும், பல வகையான கோழிகளும் உறைக் கிணறுகளும் இருக்கின்ற பட்டினத்துப் புறச்சேரிப் பகுதியிலே, செம்மறி ஆட்டுக் கிடாய்களுடன், கௌதாரிப் பறவைகளும் விளையாடிக் கொண்டிருக்கும்.இது ஒரு இணக்கமானப் பல்லுயிர்ச் சூழலைச் சித்தரிக்கிறது.

### 6. மாடு, நாய் மற்றும் ஆடுகள்: உழைப்பும் பாதுகாப்பும்

பட்டினப்பாலை மாடு, நாய், ஆடு போன்றப் பல்வேறு வளர்ப்பு உயிரினங்களைப் பற்றியும் விரிவாகக் குறிப்பிடுகின்றது. இவை ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட சமூக அல்லது பொருளாதாரத் தேவையினைப் பூர்த்தி செய்தன.

### 6.1 காளைகளின் வீரமும் உணவு மிகுதியும்

காவிரிப்பூம்பட்டினத்தின் தெருக்களில் சமையல் சாலைகளில் இருந்து வடிக்கப்பட்டக் கஞ்சி ஆறு போல ஓடியது. அங்கே காளைகள் ஒன்றொடொன்று போரிட்டுக் கொண்டன என்றச் செய்தி பட்டினப்பாலையில் வருகிறது:

**அறம் நிலைஇய அகன் அட்டில்**
**சோறு வாக்கிய கொழுங் கஞ்சியாறு**

**போலப் பரந்து ஒழுகி**

**ஏறு பொரச் சேறு ஆகி(பட்டினப்பாலை )**

அகன்ற அட்டில் சாலைகளில் சோற்றினைச் சமைத்து வடித்தக் கஞ்சியானது, ஆறு போலப் பரந்து ஓட, அங்கே காளைகள் மோதிக் கொள்வதால் அக் கஞ்சி சேறாக மாறியது.இது காளைகளின் கட்டுக்கடங்காத வீரத்தையும், அந்த ஊரின் உணவுச் செழுமையையும் புலப்படுத்துகிறது.

### 6.2 காவல் நாய்கள் மற்றும் விளையாட்டுகள்

வணிகத் துறைமுகமான காவிரிப்பூம்பட்டினத்தில் பண்டகசாலைகளைக் காக்க நாய்கள் வளர்க்கப்பட்டன. அவற்றின் உடல்வாகு மற்றும் செயல்பாடுகள் பட்டினப்பாலையில் பதிவு செய்யப்பட்டுள்ளன:

**கூர் உகிர் ஞமலிக் கொடுந்தாள் ஏற்றை**

**ஏழகத் தகரொடு உகளும் முன்றில் (பட்டினப்பாலை 140 -141 )**

பண்டகசாலை முற்றத்தில் குவித்து வைக்கப்பட்டுள்ள மூட்டைகளின் மீது கூர்மையான நகங்களையும் வளைந்தப் பாதத்தையுடைய ஆண் நாயும் (ஞமலி), செம்மறி ஆட்டுக் கிடாய்களும் (தகர்) துள்ளிக் குதித்து விளையாடும்.இது நாய்களுக்கும் மனிதர்களுக்கும் இடையிலானப் பிணைப்பை மட்டுமன்றி, அவை வணிகப் பாதுகாப்பில் கொண்டிருந்தப் பங்களிப்பையும் சுட்டிக்காட்டுகிறது.

### 7. கால்நடை வளர்ப்பும் சமூகப் பிரிவுகளும்

முல்லை நிலத்து ஆயர் மக்கள் ஆடு, மாடு போன்ற உயிரினங்களை வளர்ப்பதைப் பெரும் தொழிலாகக் கொண்டிருந்தனர். ஆயர்குல மக்களின் வீரமும், அவர்கள் கால்நடைகள் மீது கொண்டிருந்த அன்பும் சங்க இலக்கியங்களில் விரிவாகப் பேசப்பட்டுள்ளன.

### 7.1 ஏறு தழுவுதலும் வீரமும்

முல்லை நில மக்கள் தங்கள் வீடுகளில் காளைகளை வளர்த்தனர். வீரம் அற்றவனை ஆயர்குலப் பெண்டிர் விரும்ப மாட்டார் என்ற உயரிய அறம் அங்கு நிலவியது:

**கொல்லேற்றுக் கோடுஅஞ்சு வானை மறுமையும்**

**புல்லாளே ஆய மகள் (கலித்தொகை- 103 : 63-64)**

காளையின் கொம்புக்கு அச்சம் கொள்பவனை ஆயர்மகள் அடுத்தப் பிறவியில் கூடக் கணவனாக ஏற்கமாட்டாள் என்பதை இது விளக்குகிறது.இது வளர்ப்பு உயிரினங்களுக்கும் மனிதனின் வீரத்திற்கும் இடையிலான ஆழமானத் தொடர்பைக் காட்டுகிறது.

### 7.2 ஆயர் சமூகத்தின் உட்பிரிவுகள்

கால்நடைகளின் வகைகளைக் கொண்டு ஆயர் சமூகத்தினர் மூவகையாகப் பிரிக்கப்பட்டிருந்தனர்.

1. **கோட்டினத்து ஆயர்**: எருமைக் கூட்டத்தை உடையவர்.

2. **கோவினத்து ஆயர்**: பசுக் கூட்டத்தை உடையவர்.

3. **புல்லினத்து ஆயர்**: ஆடுகளை உடையவர்.

இப்பிரிவுகள் சங்க காலச் சமூகத்தில் கால்நடைகள் எந்தளவுக்குப் பொருளாதார அடியாக இருந்தன என்பதை மெய்ப்பிக்கின்றன.

**8. கீழடி அகழாய்வும் பட்டினப்பாலையும்: ஒரு வரலாற்று ஒப்பீடு**

சங்க இலக்கியச் செய்திகள் வெறும் கற்பனையல்ல என்பதற்கு அண்மைக் கால கீழடி அகழாய்வு முடிவுகள் பெரும் சான்றாக அமைந்துள்ளன. பட்டினப்பாலையில் கூறப்பட்டுள்ள குதிரை இறக்குமதி மற்றும் கால்நடை வளர்ப்பு முறைமைகள் அகழாய்வுத் தரவுகளுடன் ஒத்துப்போகின்றன.

**8.1 குதிரை இறக்குமதி**

பட்டினப்பாலையில் கடல் வழியாகக் குதிரைகள் கொண்டு வரப்பட்டது பற்றியக் குறிப்பு உள்ளது.இதனைத் தற்போதைய அகழாய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. கீழடி அகழாய்வில் குதிரையின் பல் கண்டெடுக்கப்பட்டது, சங்க காலத்தில் குதிரைகள் போருக்காகவும் வணிகத்திற்காகவும் பயன்படுத்தப்பட்டதை உறுதி செய்கிறது.

**8.2 கால்நடை எலும்புகளும் பொருளாதாரமும்**

கீழடியில் எருமை, பசு, ஆடு, நாய் போன்றப் பல்வேறு விலங்குகளின் எலும்புகள் கிடைத்துள்ளன.இது பட்டினப்பாலையில் விவரிக்கப்படும் வளர்ப்பு உயிரினங்களின் பட்டியலோடு முழுமையாக ஒத்துப்போகிறது. சங்க காலத் தமிழர்களின் பொருளாதாரம் கால்நடைகளைச் சார்ந்தே இருந்தது என்பதற்கு இது ஒரு வலுவான ஆதாரம் ஆகும்.

**9. சூழலியல் பாதுகாப்பு மற்றும் விலங்கு நலன்**

சங்க காலத்தில் உயிரினங்கள் வெறும் தேவைகளுக்காக மட்டுமன்றி, அறத்தின் அடிப்படையிலும் வளர்க்கப்பட்டன. இயற்கையைப் பேணுவதே ஒரு குடிமகனின் தலையாயக் கடமையாகக் கருதப்பட்டது.

**9.1 விலங்குகள் மீதான அன்பு**

சங்க இலக்கியத்தில் விலங்குகளின் உணர்வுகளை மதிக்கும் போக்கு மிகுதியாகக் காணப்படுகிறது. யானை, மான் போன்ற விலங்குகள் தம் துணையோடு காட்டும் அன்பைப் புலவர்கள் பல இடங்களில் பதிவு செய்துள்ளனர்.பட்டினப்பாலையில் கூட, வணிகர்கள் உயிர்களைக் கொள்வதை விரும்ப மாட்டார்கள் என்றச் செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.இது தமிழர்களின் **"யாதும் ஊரே யாவரும் கேளிர்"** என்றச் சிந்தனைப் போக்கு விலங்குகளுக்கும் பொருந்தும் என்பதை உணர்த்துகிறது.

**9.2 பல்லுயிர்ச் சூழலின் தேவை**

சங்க காலத்தில் இருந்த எருமை போன்ற விலங்குகள் இன்று அருகி வருகின்றன.அழிந்து வரும் பல்வேறு உயிரினங்களை மீட்டெடுப்பதற்குப் பண்டைய இலக்கியங்களில் உள்ள கருத்துக்கள் வலு சேர்க்கின்றன. சங்க கால மக்கள் சுற்றுச்சூழலைப் பேணிப் பாதுகாத்ததோடு, பல்வேறு உயிரினங்களையும் வளர்த்து அவற்றை அழிவிலிருந்துப் பாதுகாத்தனர்.

**10. முடிவுரை**

பட்டினப்பாலையில் விவரிக்கப்படும் வளர்ப்பு உயிரினங்கள் பற்றியச் செய்திகள், பண்டையத் தமிழர்களின் மேன்மையான வாழ்வியலை எடுத்துரைக்கின்றன. காவிரி ஆற்றின் வளம், மருத நிலத்தின் செழுமை, அங்கு வளர்க்கப்பட்ட எருமை, பசு, கோழி, நாய், ஆடு போன்ற விலங்குகள் அனைத்தும் ஒரு சிறந்தச் சமூகக் கட்டமைப்பின் அங்கமாகத் திகழ்ந்தன.

இக்காலங்களில் அழிந்து வரும் பல்வேறு உயிரினங்களை மீட்டு எடுப்பதற்கும், இயற்கையோடு இயைந்த வாழ்வை வாழ்வதற்கும் சங்க இலக்கியக் கருத்துக்கள் இன்றும் பொருத்தமானவையாக உள்ளன.கீழடி போன்ற அகழாய்வு முடிவுகள் இவ் இலக்கியத் தரவுகளை வரலாற்றுப் பூர்வமாக

உறுதிப்படுத்துகின்றன.எனவே, வளர்ப்பு உயிரினங்களைப் பாதுகாப்பதும், அவற்றைப் பராமரிப்பதும் நம்முடைய பண்பாட்டு அடையாளத்தை மீட்டெடுப்பதன் ஒரு பகுதியாகும்.

---

**மேற்கோள் குறிப்பு (Citation)**

ஆய்வாளர். "பட்டினப்பாலையில் வளர்ப்பு உயிரினங்கள்: சமூகப் பொருளாதார மற்றும் சூழலியல் நோக்கு."*தமிழியல் ஆய்வுத் திரட்டு*, தொகுதி 12, எண் 4, 2024, பக். 45-120.

**Works Cited**


1. அண்ணாமலை, சுப, உரையாசிரியர்.*சங்க இலக்கியம் (கலித்தொகை)*. வர்த்தமானன் பதிப்பகம், 2012.
2. அண்ணாமலை, சுப, உரையாசிரியர்.*சங்க இலக்கியம் (குறுந்தொகை)*. வர்த்தமானன் பதிப்பகம், 2012.
3. சுப்பிரமணியன், ச. வே, உரையாசிரியர்.*சங்க இலக்கியம் பத்துப்பாட்டு*. வர்த்தமானன் பதிப்பகம், 2010.
4. வரதராசனார், மு.*திருக்குறள் (தெளிவுரை)*. திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 2015.
5. Chelliah, J. V. *Pattupattu: Ten Tamil Idylls*. General Printers and Publishers, 1946.
6. Mahesh, T. N. "Pattinappalai — The Sangam Era Poem." *Medium*, 14 June 2024, medium.com/@tnmaheshlic/pattinappalai-the-sangam-era-poem-14143cdb8810.
7. "Paṭṭiṉappālai." *Wikipedia, The Free Encyclopedia*, 2024, en.wikipedia.org/wiki/Pa%E1%B9%AD%E1%B9%ADi%E1%B9%89app%C4%81lai.
8. "Sangam Literature and Ecology." *ResearchGate*, 2022, www.researchgate.net/publication/366490931.
9. "Wildlife and Biodiversity in Sangam Literature." *DownToEarth*, 18 Oct. 2024, www.downtoearth.org.in.